<u>சாதாரண கூட்டம்</u>

2025–ம் ஆண்டு நகர்மன்ற கூட்டம் நவம்பர் மாதம் 07 –ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>பொருள் எண் 1</u>

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் நவம்பர் 2025 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.1554/2014/சி1**

**தீர்மான எண்.226 நாள்.07.11.2025.**

**பதிவுசெய்யப்பட்டது.**

<u>பொருள் எண் 2</u>

பள்ளிபாளையம் நகராட்சியின் பயன்பாட்டில் இருந்து வரும் 2 எண்ணிக்கையிலான மரம் அறுக்கும் இயந்திரங்கள் பழுது ஏற்பட்டு இயக்க இயலாத நிலையில் உள்ளதால், மேற்படி மரம் அறுக்கும் இயந்திரங்களை பழுது சரிசெய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதி நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண்.1628/2025/இ1**

**தீர்மான எண்.227 நாள்.07.11.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 3</u>

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளில் உள்ள 1393 எண்ணிக்கையிலான மின் விளக்குகளை நகராட்சி மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வரப்படுகிறது. மேலும் அதற்கு தேவையான மின் உதிரி பாகங்கள் மராமத்துப்பணிக்காக நகராட்சியால் ஒப்பந்த முறையில் கொள்முதல் செய்து தெருவிளக்கில் ஏற்படும் பழுதினை உடனுக்குடன் சரி செய்ய தேவையான உதிரிபாகங்களை ஒப்பந்தம் மூலம் 2025–26 ஆம் ஆண்டிற்கு கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.1723/2025/இ1**

**தீர்மான எண்.228 நாள்.07.11.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 4</u>

பள்ளிபாளையம் நகராட்சி 15வது நிதிக்குழு சுகாதார மானிய திட்டம் 2025–26ன் கீழ், கீழ்கண்ட பணிக்கு 10.10.2025ம் தேதி வெள்ளிக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சம் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **15வது நிதிக்குழு சுகாதார மானிய திட்டம் 2025-26**<br>அரசு மருத்துவமனை வளாகத்தில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி | 350.00 | M/s. ஸ்டேன்லி ஹைடெக் கன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடேட், 48/5, ஹவுசிங் யுனிட், உழுவன் பேக்கரி எதிரில், கரட்டுப்பாளையம், பரமத்தி வேலூர் ரோடு, சிறுமொளசி அஞ்சல், நாமக்கல் மாவட்டம். | 0.11 % குறைவு |
| | | | G.மோகன்ராஜ், 2–26, பி.மேட்டுபாளையம், பிள்ளாநத்தம் அஞ்சல், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். | 5.83 % கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.11% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s. ஸ்டேன்லி ஹைடெக் கன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடேட், கரட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.451 /2025/இ1**

**தீர்மான எண்.229 நாள்.07.11.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 5</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18464/2023/DO1 நாள்.07.10.2025ன்படி, நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளில் பழுதடைந்த குண்டு, குழிகளை சீர்செய்ய இரண்டாம் நிலை நகராட்சிக்கு ரூ.5.00 இலட்சத்தில் பொதுநிதியில் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி குண்டு குழிகளை சீரமைக்க ஆகும் செலவினத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதி நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண்.1362/2025/இ1**

**தீர்மான எண்.230 நாள்.07.11.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 6</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவில் நகராட்சி பொறியாளர் பயன்பாட்டிற்கு உள்ள கணினியில் திரை பழுதடைந்து, பழுது சரிசெய்ய இயலாத காரணத்தால் அவசர அவசியம் கருதி புதியதாக ரூ.9800/– க்கு கொள்முதல் செய்வதற்கு 30.10.2025அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | GSC Technology & Services<br>39டி, ஆர்.பி காம்பளக்ஸ்,<br>பள்ளிபாளையம் ரோடு,<br>குமாரபாளையம் – 638 183 | ரூ.9794/– |

| | | |
|---|---|---|
| 2) | Perennial Systems<br>2/15,  விநாயகர் கோவில் தெரு,<br>சுவர்ணபுரி, சேலம் – 636 004. | ரூ.10266/– |
| 3) | Interfaces Technologes<br>7,Dr.சரவணபவன் காம்பிளக்ஸ் முதல் தளம்,<br>மேட்டு தெரு, ஈஸ்வரன் கோவில் எதிர்புறம்,<br>சேலம் – 636 001. | ரூ.10856/– |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்குவதற்கும், செலவினத்தை பொதுநிதியில் இருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.1629/2025/இ1**

**தீர்மான எண்.230  நாள்.07.11.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 7**

பள்ளிபாளையம் நகராட்சி ஆவாரங்காடு நகராட்சி துவக்கப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கழிப்பிடம் சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் புதியதாக கழிப்பிடம் மற்றும் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு கை கழுவும் மேடை அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 8.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் இருந்து அனுமதி பெற்று பணியினை தொடரலாம்.

**கோப்பு எண்.11723/2025/இ1**

**தீர்மான எண்.231  நாள்.07.11.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 8**

பொதுசுகாதாரப் பணிகளுக்கு தேவையான லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்ய 07.10.2025–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு செய்யபட்டதில் 31.10.2025–ந் தேதி கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை லிட்டர் 1–க்கு GST 18% உட்பட ரூ.பை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s. ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன்,<br>1/110,மோகனூர் ரோடு, நாமக்கல் | 2596.00 /– | குறைவு |
| 2 | M/s. ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ்,<br>1/34, காளப்பநாயக்கன்பட்டி.நாமக்கல். | 2630.00 /– | அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார பணிகளுக்கு தேவையான லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்ய வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் காணும் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய M/s. ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், 1/110,மோகனூர் ரோடு, நாமக்கல் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்..

**கோப்பு எண். 1021/2025/எச்1**

**தீர்மான எண்.233  நாள்.07.11.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 9**

பொதுசுகாதாரப் பணிகளுக்கு தேவையான லைசால் மருந்தினை கொள்முதல் செய்ய 07.10.2025–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு செய்யபட்டதில் 31.10.2025–ந் தேதி கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை லிட்டர் 1–க்கு GST 18% உட்பட ரூ.பை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s. ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், 1/110,மோகனூர் ரோடு, நாமக்கல். | 233.64 /– | குறைவு |
| 2 | M/s. ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், 1/34, காளப்பநாயக்கன்பட்டி, நாமக்கல். | 240.00 /– | அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.பொதுசுகாதார பணிகளுக்கு தேவையான லைசால் மருந்தினை கொள்முதல் செய்ய வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் காணும் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய M/s. ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், 1/110,மோகனூர் ரோடு, நாமக்கல் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்.1020/2025/எச்1**

**தீர்மான எண்.234 நாள்.07.11.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 10**

அரசாணை எண்.629 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நிலம் பிரிவு LD 4(1), நாள். 16.09.2025 இல் சிலைகள் மற்றும் கொடிகம்பங்கள் நிறுவுவது தொடர்பாக நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, எனவே மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**கோப்பு எண். 1506/2025/எப்1**

**தீர்மான எண்.235 நாள்.07.11.2025.**

**பதிவுசெய்யப்பட்டது.**

**பொருள் எண் 11**

தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2022–2023ம் ஆண்டின் கீழ் சிப்பம் எண். (2) மதிப்பீடு ரூ.378.00 இலட்சத்தில் 1.50 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு 25.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, M/s பூரணி அன் கோ, காரைக்குடி என்ற நிறுவனத்திற்கு பணியினை மேற்கொள்ள 05.05.2023 ல் பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு சிப்பம் (2) 1.50 MLD தேர்வு செய்யப்பட்ட இடத்தில் பணிமேற்கொள்ள இயலாத நிலையில், மேற்படி பணியினை தடுத்தலும், திருத்தலும் பணிக்கு (I&D) ரூ.378.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு திருத்திய விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டு, கடந்த 09.10.2025 அன்று SHPC குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.189/2025–SBM1–Part(2) நாள்.04.11.2025 ல் திருத்திய விரிவான திட்ட அறிக்கைக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, 25.04.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்து புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 1443/2023/இ1**

**தீர்மான எண்.236 நாள்.07.11.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 12**

பள்ளிபாளையம் நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் மன்றப்பொருள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்ற கூட்டத்தில் முதல் தகவல் அறிக்கைகளை பதிவு செய்தல், பரந்த அதிகார வரம்பு, அதிகரித்து வரும் மக்கள் தொகை, நகர்ப்புற விரிவாக்கம் மற்றும் பாதுகாப்பு, அதிக எண்ணிக்கையிலான மக்கள் குறைதீர் மனுக்கள், சாலை விபத்துகள் மற்றும் சாலை பாதுகாப்பு ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு, தேவையான பணியிடங்களுடன் ரூ.72.30 இலட்சம் மதிப்பீட்டில் நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தில் புதிதாக காவல் உட்கோட்டம் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவ, இப்புதிய காவல் உட்கோட்டத்தினை கொமரபாளையம் வட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதி பொதுமக்களும் பயன்பெறும் வகையில் பள்ளிபாளையம் சுற்றுவட்டாரப் பகுதியில் அமைக்கப்பட வேண்டுமென நமது கழக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், இதனை சார்ந்த அனைத்து துறைகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கடிதம் அனுப்புதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.237 நாள்.07.11.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 13**

பள்ளிபாளையம் நகராட்சியில் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் மன்றப்பொருள்.

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகரின் மையப்பகுதியில் கதவு எண். 19, சங்க்கிரி பைபாஸ் ரோடு என்கிற முகவரியில் தின் பைன் ஆர்ட்ஸ் கிளப் (Fine Arts Recreation Club) FL2 அமைந்துள்ள பகுதியினை சுற்றி 5 மருத்துவமனைகள், பாரத மாநில வங்கி மற்றும் இதர பிற 7 வங்கிகளும் உள்ளன. அங்கன்வாடி மையங்கள், ரேஷன் கடைகள், மஜித்திற்கு செல்லும் வழியாகவும் மற்றும் பள்ளி குழந்தைகள் பள்ளிக்கு செல்லும் பிரதான சாலையில் தின் பைப் ஆர்ட்ஸ் கிளப் (Fine Arts Recreation Club) FL2 பார் அமைந்துள்ளது. இம்மதுபானக் கடைகளில் மது அருந்திவிட்டு சாலைகளில் மதுபிரியர்கள் ரகளைகளில் ஈடுபடுவதால், அவ்வழியாக செல்லும் பெண்களுக்கு பாதுகாப்பு அற்ற சூழ்நிலையில் உள்ளது. மேலும் பள்ளிபாளையம் குடியிருப்புகள் நிறைந்த நகரப் பகுதியில் பல இடங்களில் அமைந்துள்ள சட்டவிரோதமான சந்து கடைகளை அகற்ற வேண்டும். எனவே, பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடங்களில் அமைந்துள்ள பைன் ஆர்ட்ஸ் கிளப் (Fine Arts Recreation Club) FL2 மற்றும் சந்து கடைகளை அகற்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கடிதம் அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.238 நாள்.07.11.2025.**

**அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) மோ.செல்வராஜ்,
தலைவர்,
பள்ளிபாளையம் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
பள்ளிபாளையம் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.